**திருவையாறு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**

**நி.ம.எண்: 11/2022**
**இன்**
**அ.வ.எண்.170/2015**
**ம.சா.1**

**நாள்: 12.11.2024**

மனுதாரர் தரப்பு சாட்சியாக வாக்குமூலம் 1969 ஆம் ஆண்டின் 44ஆம் விதியின் கீழ் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | R.M. அண்ணாமலை | | |
| தந்தை பெயர் | (லேட்) ராமநாதன் | | |
| கிராமம் | அம்மன்சன்னதி தெரு | தொழில் | விவசாயம் |
| வட்டம் | திருவையாறு | வயது | 67 ஆண்டுகள் |

**முதல் விசாரணை :**

நான் இந்த வழக்கின் மனுதாரர். எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். இவர் மூலம் கீழ்காணும் ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

1) 27.10.1999 ஆம் தேதியிட்ட மனுதாரர் - வாதி, எதிர்மனுதாரர் - பிரதிவாதி நிர்வாகத்திற்கு பொது மக்கள் நலன் கருதி எழுதி கொடுத்த சாசன ஆவணம் சான்றிட்ட நகல். ம.சா.ஆ.1.

2) 12.07.2000 ஆம் தேதியிட்ட மனுதாரர் - வாதி, புல எண். 228 1சி 2-ல் உள்ள மொத்த விஸ்தீரணம் 3081 சதுரடி சூர்யமூர்த்தி என்பவருக்கு விற்கப்பட்ட சதுரடி 2295-க்கு உரிய கிரய ஆவணம். சான்றிட்ட நகல். ம.சா.ஆ.2.

3) 08.02.2000 தேதியிட்ட எதிர்மனுதாரரால் அனுமதிக்கப்பட்ட வரைபடம். சான்றிட்ட நகல். ம.சா.ஆ.3.

4) 09.03.2017 ஆம் தேதியிட்ட திருவையாறு உரிமையியல் நீதிமன்றம் எதிர்மனுதாரருக்கு எதிராக வழங்கப்பட்ட தீர்ப்பும் மற்றும் தீர்ப்பாணையும் வழங்கப்பட்ட சான்றிட்ட நகல். ம.சா.ஆ.4.

5) 25.08.2022 ஆம் தேதியிட்ட எதிர்மனுதாரருக்கு, மனுதாரர் வழக்கறிஞர் மூலம் அனுப்பிய அறிவிப்பு. அலுவலக நகல். ம.சா.ஆ.5.

6) 06.09.2022 ஆம் தேதியிட்ட எதிர்மனுதாரர் அறிவிப்பினை பெற்றுக் கொண்டு ஒப்புதல் அட்டையில் கையெழுத்து இட்டது அசல். ம.சா.ஆ.6.

7) 31.08.2022 ஆம் தேதியிட்ட தங்கம் ஸ்டீல் கம்பெனி திருவையாறு மனுதாரர் தகர அடைப்புக்கு வாங்கப்பட்ட பொருட்களின் பட்டியல் அசல். ம.சா.ஆ.7.

8) 31.08.2022 ஆம் தேதி தகர சீட்டுக்களை அடைத்ததற்காக வெல்டரால் வழங்கப்பட்ட சான்று அசல். ம.சா.ஆ.8.

9) 01.09.2022 ஆம் தேதி மனுதாரர் காவல் உதவி ஆய்வாளருக்கு இயங்கலை மூலமாக அனுப்பிய புகார் மனு அசல். ம.சா.ஆ.9.

10) சம்பவ இடத்தில் தகர அமைப்புகளை பிரித்தது சம்மந்தமாக மனுதாரரால் எடுக்கப்பட்ட நிழற்படம் மற்றும் சி.டி. அசல். ம.சா.ஆ.10.

11) 01.09.2022 ஆம் தேதியிட்ட இயங்கலை மூலமாக புகார் அனுப்பப்பட்டதற்கு வழங்கப்பட்ட சீட்டு கணினி மூலம் பெறப்பட்ட ரசீது. ம.சா.ஆ.11.

12) 15.09.2022 ஆம் தேதியிட்ட திருவையாறு காவல் நிலையத்தினர் மனுதாரர் கொடுத்த புகார் சம்மந்தமாக விசாரணை செய்த போது எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் கொடுத்த கடிதம் அசல். ம.சா.ஆ.12.

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

/ஒ .ம்/

திரு. D. ஹரிராம், B.Com., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவையாறு. (மு.கூ.பொ)